வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு, சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு, முதல் விசாரணையின் தொடர்ச்சி.....................

தாவா சொத்தின் வீட்டு வரி ரசீதுகள் (எண்ணிக்கை - 2) தாக்கல் செய்கிறேன். அவைகள் முறையே வா.த.சா.ஆ.5 ஆகும். 30.07.2009-ம் தேதிய கிரய ஆவணத்தின் ஒப்பீடு நகலை தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.6 ஆகும். தாவா சொத்திற்குரிய பட்டா மாறுதல் உத்தரவு ஒப்பீடு நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.7 ஆகும். தாவா சொத்திற்குரிய வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.8 ஆகும். தாவா சொத்திற்குரிய மின் கட்டண ரசீது தாக்கல் செய்கிறேன். அது வா.த.சா.ஆ.9 ஆகும். தாவா சொத்திற்குரிய பயிர் காப்பீடு ரசீதுகள் (எண்ணிக்கை - 2) தாக்கல் செய்கிறேன். அவைகள் முறையே வா.த.சா.ஆ.10 ஆகும். தாவா சொத்தை காட்டக்கூடிய புகைப்படங்கள் தாக்கல் செய்கிறேன். தாவா சொத்திற்குரிய புல வரைபடம் தாக்கல் செய்கிறேன். எனது குடும்ப அட்டை நகல் தாக்கல் செய்கிறேன். 01.12.1993-ல் ஏற்பட்ட கிரய சாசன ஒப்பந்தத்தை தாக்கல் செய்கிறேன். தாவாபடி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

(ஒப்பீடு செய்யப்பட்ட ஆவணங்களின் அசலை குறுக்கு விசாரணையின் பொழுது தாக்கல் செய்கிறேன்.)

(பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)